**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY OF M/S. S. SADHASIVAM ROUGH STONE AND GRAVEL QUARRY IN 1.54.0 HA LOCATED IN SF.NO 211/1, 211/2 KUPPAM VILLAGE, PUGALUR TALUK, KARUR DISTRICT HELD ON 14.06.2023 AT 1.00 PM IN MURUGAN THIRUMANA MANDAPAM, KUPPAM VILLAGE, PUGALUR TALUK, KARUR DISTRICT.**

**Participant:**

1. Mr.M. Kannan,
   District Revenue Officer,
   Karur District.

2. Er. D. Jeyalakshmi,
   District Environmental Engineer,
   Karur District.

3. Publics and Environmentalists – List enclosed.

**District Environmental Engineer:**

The District Environmental Engineer in her welcome address, on behalf of the District Administration and Tamil Nadu Pollution Control Board welcomed all the visitors to attend the public hearing. Also informed that the occupier of M/s. S. Sadhasivam Rough Stone and Gravel Quarry had applied to conduct a public hearing regarding the quarry.

According to the Environmental Impact Assessment Notification, 2006 order, consultation of public opinion for the above projects has been made mandatory. So the Public Hearing meeting is being held on today's date. In this regard, an advertisement has already been made in Dinathanthi Tamil Newspaper dated 12.05.2023 and The Hindu English Newspaper dated 13.05.2023 in the copies of the Environmental Impact Assessment Report related to this project were displayed for public inspection at the District Collector's Office, District Industrial Center and Panchayat Union Office, etc a month ago, she said.

She also informed that the public announcement about the meeting was made through loudspeaker, leaflets and posters on 12.06.2023 in Kuppam and surrounding Villages. She also informed that the summary report in Tamil and English related to the said project has also been

uploaded on the website of Tamil Nadu Pollution Control Board for public viewing. Then the District Revenue Officer asked him to preside over the meeting.

**District Revenue Officer:**

The District Revenue Officer, who presided over the address, welcomed the audience to the Public Hearing. He informed that public consultation meeting is being conducted as per government guidelines for M/s. S. Sadhasivam Rough Stone and Gravel Quarry in Kuppam village, SF No. 211/1, 211/2. He also said that the information related to the project has already been uploaded on the websites. He then asked the general public to express their views clearly and concisely without any hesitation. He informed that all the opinions of the public participating in this meeting will be forwarded to the government without any discrimination. He also said that the project consultants of the company are currently going to explain the information related to this project.

**Environmental consultant Geo Exploration and Mining Solutions:**

He welcomed all departmental Government officials including District Revenue Officer and District Environmental Engineer, Press friends, Environmentalists and Police Officers, those who are allto participated in this Public Hearing meeting. He explained the details of the proposed project as follows.

1. An Introduction to Quarry Scheme
2. Location map of project site
3. 500 meter radius satellite photo
4. Details of proposed quarries within 500 meters radius
5. Details of ongoing and completed quarries within 500 meters radius
6. Satellite photograph of project site
7. Photograph of project site
8. Total geological resources and total quarry reserves
9. Features surrounding the project site
10. Basic environmental monitoring
11. Land Environment
12. Land use within 10 km radius
13. Soil environment
14. Topographic map showing locations where soil properties have been studied
15. Soil test results
16. Water environment
17. Topographic map showing locations where water quality has been studied
18. Results of water quality survey

19. Climate
20. Map of wind direction
21. Topographic map showing locations of air quality monitoring
22. Results of air quality survey
23. Sound environment
24. Topographic map showing recorded locations of sound level survey
25. Results of Volume Study
26. Photograph of basic data (air, sound) collection
27. Anticipated environmental impacts and preventive measures
28. Environmental Impact Assessment
29. Mitigation measures
30. Anticipated environmental (acoustic) impacts and preventive measures
31. Anticipated Environmental (Hydroenvironmental) Impacts and Preventive Measures
32. Water sprinkling on roads
33. Construction of green wall
34. Benefits of the Scheme
35. Environmental Management Plan
36. Occupational Health and Safety
37. Benefits of the Scheme
38. Conclusion

**District Environmental Engineer:**

She asked the public to register their name and address and give their views on the project accordingly.

1. **Mr. K. Murukesan, Vallipuram:**

   He said that he has no objection to the S. Sadhasivam Rough Stone and Gravel Quarry.

2. **Mr. K. Thangarasu, Thalaiyuthupatti:**

   He said that he has no objection to the S. Sadhasivam Rough Stone and Gravel Quarry.

3. **Mr. K. Kaliyappan, Antippati:**

   He said that he has no objection to the S. Sadhasivam Rough Stone Quarry and permit can be given to the quarry.

4. **Mr. Gopalakrishnan, Thalaiyuthuppati:**

   He said that permission can be given for to the S. Sadhasivam Rough Stone and Gravel Quarry.

5. **Mr. Subramaniyam, Thiruppathi:**

He said that he has no objection to the Sadhasivam Rough Stone and Gravel Quarry.

6. **Mr. A. Sivakumar, Thiruppathi:**

He said that permission can be given to the S. Sadhasivam Rough Stone and Gravel Quarry.

7. **Mr. Vinoth, MGR Nagar:**

He said that he has no objection to the Sadhasivam Rough Stone and Gravel Quarry.

8. **Mr. Ravichandran, Karudayampalayam:**

He expressed his objection to the Sadhasivam Rough Stone and Gravel Quarry. He said that there is a large amount of quarrying in this area and livelihood will be affected, especially Agriculture, Goats, Cows, Drinking water pollution, Soil pollution, Building cracks may occur. Thus he humbly requested not to grant permission to Quarry. He concluded his speech by saying that this Bhumitai will not forgive anyone who cheats the government or the government officials and the curse of future generations will punish those who commit these mistakes.

9. **Mr. S. Murugesan, Velliyampalayam:**

He said that he has no objection to the Sadhasivam Rough Stone and Gravel Quarry.

10. **Mr. Sundaraj, Noyyal:**

He said that permission can be given for to the S. Sadhasivam Rough Stone and Gravel Quarry.

11. **Mr. Karthik, Velaudhampalayam:**

He said that permission can be given for to the S. Sadhasivam Rough Stone and Gravel Quarry.

12. **Mr. Sathis, Puthurpatti:**

He said that permission can be given for to the S. Sadhasivam Rough Stone and Gravel Quarry.

13. **Mr. Balamurugan, Karur:**

He said that he has no objection to Sadhasivam Quarry if quarrying operation works according to government rules.

14. **Mr. Shanmugam, Tholarkalagam, Karur:**

He gave his respects to the District Revenue Officer and the District Environmental Engineer. Then he asked "Will this District Administration give permission if I brews liquor and sells ganja and provides employment?" also said that he would give employment to as many people as he would give employment . Will people come to work if he provides employment like this? No, Because people know that it is offence according to the law. Some

people said they were given permission to visit Quarry, but we were not allowed to enter Quarry. He said that it is sad that the party which was formed for the workers and the people for their rights are also supporting for the Quarry operation. He concluded his speech by saying that the District Administration should keep in mind that the soil should be good.

15. **Mr. Boopathi, Thalauthupatti:**

He said that he was from Thalayuthupatti and he said no objection for the Quarry as the quarry was not going to be operated with big machinery and there would be no environmental impact.

**16. Mr. Suresh, Arasampalayam:**

He said that he has no objection to Sadhasivam Quarry

**17. Mr. Prabhakaran, Punnamsathiram:**

He said he had no objection. He also said his opinion as they cut the base stones needed for the buildings and roads. So he said that permission can be given after taking considerations of the above.

**18. Mr. Vijayan, Cauvery River conservation Movement, Karur :**

He said that the rainfall in Karur area is already decreasing year by year, so more trees should be planted, forests should be protected and the environment should be protected. Then he requested that permission should not be given for not only sand Quarry and S. Sathasivam Quarry also.

**19. Mr. Shanmugan, Anti-Illegal Quarrying Movement, Karur:**

First, he greeted to the Honourable District Revenue Officer, the District Environmental Engineer and the officers of various departments. He continued his speech by saying that permission should not be given to the quarry for M/s.Sathasivam Quarry, which is located on an area of 1.54.0 hectares in Kuppam Village. He said, "Already more than 50 quarries have damaged this area. In the Pollution Control Board book, the area has also been mentioned as over-exploited area. The ground water level already reduced below 1000 feet. There is an uninhabitable situation for the people in the area. And the permission for Public hearing has been given for this quarry by giving false information to the Environmental Impact Assessment Authority.

He said that there is one house in survey number 262, some houses in 212 survey numbers, another house in SF No 305, a temple in SF No. 380 and houses in survey numbers 204,203,384. Therefore he said that permission should not be given for this quarry based on the 300m rule.

He said that, the Public Hearing for this Quarry is happening today but the quarry is already in operation and also nearby Panchayat Road. He said that this is wrong according to

law. He also mentioned that there is a water tank worth 7.5 crores under the irrigation project worth 440 Crores at a distance of 100m from the quarry, and there are water bodies and drinking water sources within 500m distance.Also there are houses in SFNo.221 and 222. Electric poles are nearby. He said that it was not shown in the project report and the quarrying work was going on near the Electric pole. He concluded his speech by saying that the permission should not be given to this Quarry which undergone so many such violations.

**20. Mr. M.R.K. Siva, Karur:**

First he offered his salutations. He also said that the quarry was already operational and had come back for permission. He also mentioned that the quarry was not functioning as per the previous project report. He said that excessive quarrying has been done and is currently in operation without permission and the quarry doesnot follow any regulations and it is danger to the public also.This quarry stones are being taken high loads causing damage to the roadways and if this quarry is allowed for operation, such violations will occur.

He said that no action was taken on the complaint and no reply was sent. He concluded his speech by objecting that if this quarry is allowed, it will not only affect the environment but also affect the livelihood of the people.

**21. Mr. Mukilan, Coordinator, Tamil Nadu Environment Protection Movement, Karur:**

First, he greeted to the Honourable District Revenue Officer, the District Environmental Engineer and the officers of various departments, the quarry owners, the people brought by the quarry owners, the social activists who have visited and petitioned for the construction of the quarry in Kuppam village after spending tens of thousands of rupees. Already there is Nallasamy Quarry in SF No. 226 on the East side of this quarry. He also said that just beyond the road on the west side, there is a NTC Quarry in SF No 362.

In the VAO report, in Annexure 97A of EIA report mentioned that, there is no objection for this quarry and there are no approved residences, no major temples and no high voltage lines within the 300m radius, but in the project report, EB line is passing along the quarry in West side.

He also said that the quarry has just been approved and the consultation meeting is being held now, but the quarry is already in operation and the owners have shown the google map that the quarry is operated illegally. He also stated that anyone who plundered minerals should be arrested. And they are running a quarry adjacent to the road. So he requested that immediate action should be taken on this Quarry.

He mentioned that there is a temple in SF No. 505 in the southern side of the quarry and there is a house in SF No 362 in the western side, and in the east side, there is Thalayuthupatti Veerakumarasamy temple in SF No. 224 and there are houses nearby in SF

No.220, 221,222,212,198. He also told that all details are mentioned revenue department records and showed the documents to the meeting.

He also mentioned that there is a water tank worth 7.5 crores under the irrigation project worth 440 crores at a distance of 100m from the quarry, and there are water bodies and drinking water sources within 500m distance.

He said that permission should not be given to the Quarry, which had committed so many violations, and these violations should be informed to the State Environmental Impact Assessment Authority.

And also he said thatwe are not opposite to quarrying and sand mining. We can import it from abroad at a very cheap price (Rs 1000 per ton). 15 lakh tons of sand can be imported and it will be enough for Tamil Nadu. 50-60 percent of M-Sand goes to the neighboring states and Government officials should stop and catch them. He also asked to catch the overloaded trucks.

He said that the quarries which are running currently in Karur district and 300 quarries which said to be completed, should be inspected. He said that generate revenue for the government, insisting that the quarries should build roads at their own expense and insisting that all the quarries should build green fences, put up wire fences and put up name boards.

He also said that the crushers operating illegally should be closedand compensation should be imposed on the illegal quarries. Finally, he concluded his speech by saying that permission should not be given for the quarry, but also Sathasivam deserved to be arrested for violating the quarry.

**District Environmental Engineer:**

Finally, in her speech of thanks, she expressed her gratitude on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board to the government officials including the District Revenue Officer, the police, journalists and the public who presided over this public hearing meeting. Also, the public hearing meeting came to an end with National Anthem.

**District Environmental Engineer,**
**TamilNadu Pollution Control Board,**
**Karur.**

**District Revenue Officer,**
**Karur.**

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

14.06.2023 அன்று காலை 1.00 மணி அளவில், கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், குப்பம் கிராமம் நெ. 198/1 அத்திப்பாளையம் ரோடு, குப்பம் பகுதியில் அமைந்துள்ள முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், குப்பம் கிராமம், 1.54.0 ஹெக்டேர் பரப்பளவில். பு. எண். 211/1, 211/2 அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி சுரங்கம் திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.

**பங்கு பெற்றோர்:**

1. திரு.ம. கண்ணன்,
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   கரூர் மாவட்டம்.

2. திருமதி. த. ஜெயலட்சுமி எம். இ.,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   கரூர்.

3. பொதுமக்கள்— (இணைப்பில் உள்ளபடி)

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தனது வரவேற்புரையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக, பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு கலந்து கொள்ள வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்பதாக கூறினார். மேலும் தி/ள். S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தார் குவாரி தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தினை நடத்தி தருவதற்காக விண்ணப்பம் செய்திருந்தனர். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006 உத்தரவின்படி, மேற்படி திட்டங்களுக்கு பொது மக்களின் கருத்துகளை கேட்டு அறிவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. எனவே இன்றைய தேதியில் கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது. இது தொடர்பாக ஏற்கனவே 12.05.2023 நாளிட்ட தினத்தந்தி தமிழ் நாளிதழ் மற்றும் 13.05.2023 நாளிட்ட தி இந்து ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது எனவும் இந்த திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் நகல்கள் ஒரு மாதத்திற்கு முன்பாகவே மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மாவட்ட தொழில் மையம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார். மேலும் கூட்டத்தை பற்றிய பொது அறிவிப்பு ஒலி பெருக்கி, துண்டு பிரசுரம், சுவரொட்டி மூலமாக 12.06.2023 அன்று குப்பம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். மேலும் மேற்படி திட்டம் தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில சுருக்கு அறிக்கை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை கூட்டத்திற்கு தலைமையேற்றி நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

**மாவட்ட வருவாய் அலுவலர்:**

தலைமை உரையாற்றிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வந்த அனைவரையும் வரவேற்றார். இங்கு தி/ள். S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக குப்பம் கிராமத்தில் புல. எண் 211/1, 211/2 பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் அரசு வழிகாட்டுதலின்படி நடத்தப்படுவதாக தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர் பொது மக்கள் தங்கள் கருத்துக்களை எவ்வித தயக்கமின்றி தெளிவாகவும், சுருக்கமாகவும் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் அனைத்து கருத்துக்களும் எவ்வித பாகுபாடுமின்றி அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார். மேலும் இத்திட்டம் தொடர்பான தகவல்களை விளக்கக் காட்சியாக நிறுவனத்தின் திட்ட ஆலோசகர்கள் தற்போது உங்களுக்கு விளக்கமாக தெரிவிக்க உள்ளனர் என்று தெரிவித்தார்.

**சுற்றுச்சூழல் ஆலோசகர் ஜியோ எக்ஸ்புளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ்:**

இந்த பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்களையும் பத்திரிக்கை நண்பர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் மற்றும் காவல்துறை அதிகாரிகளையும் வரவேற்பதாக தெரிவித்தார். இவர் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு விவரித்தார்.

1. சுரங்கத்தினை பற்றி ஓர் அறிமுகம்
2. திட்டத்தளத்தின் இருப்பிட வரைப்படம்
3. சுரங்கத்தின் திட்ட விவரங்கள்
4. திட்டதளத்தை சுற்றியுள்ள அம்சங்கள்
5. செயற்கைக்கோள் புகைப்படம் – 500 மீ சுற்றளவு
6. திட்டத்தளத்தின் புகைப்படம்
7. கனிம வளங்கள் இருப்புகள் மற்றும் வெட்டி எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அளவுகள்
8. சுரங்கங்களின் விவரங்கள் – 500 மீ சுற்றளவு
9. 10 கி.மீ சுற்றளவில் இருக்கும் அம்சங்கள்
10. 10 கி.மீ சுற்றளவில் இருக்கும் நிலப்பயன்பாடு
11. 10 கி.மீ சுற்றளவு அடிப்படை தரவு வரைபடம்
12. அடிப்படை சுற்றுச்சூழல் கண்காணிப்பு
13. மண்மாதிரி சேகரிக்கப்பட்ட இடத்தின் வரைபடம்
14. நில சுற்றுப்புற சூழ்நிலை
15. மண் சுற்றுப்புற சூழ்நிலை
16. நீர் தன்மை ஆய்வு செய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்
17. காற்று வீசும் திசையின் புகைப்படம்
18. காற்று கண்காணிப்பு செய்யப்பட்ட இடத்தின் வரைபடம்
19. காற்று கண்காணிப்பு ஆய்வின் முடிவுகள்
20. ஒலி அளவு ஆய்வின் செய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படம்

21. ஒலி அளவு ஆய்வின் முடிவுகள்

22. எதிர் பார்க்கப்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

23. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

24. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் ஒலி சூழல் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

25. சாலைகளில் நீர் தெளித்தல்

26. பசுமை அரண் அமைத்தல்

27. தொழில்நுட்பம் மற்றும் தளம்

28. திட்ட நன்மைகள்

29. திட்ட நன்மைகள்–சுற்றுப்புற சூழல் மேம்பாட்டிற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி

30. சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம்

31. முடிவுரை

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியினை பதிவு செய்துவிட்டு அதன்படி இத்திட்டம் குறித்த கருத்துகளை தெரிவிக்குமாறு கூறினார்.

1. **திரு.K.முருகேசன், வள்ளிபுரம்:**

குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என கூறினார்.

2. **திரு. K.தங்கராசு, தமையுத்துப்பட்டி:**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

3. **திரு. K.காளியப்பன்,ஆண்டிப்பட்டி:**

குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என கூறினார்.

4. **திரு.கோபாலகிருஷ்ணன், தமையுத்துப்பட்டி:**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு அனுமதி தரலாம் எனக் கூறினார்.

5. **திரு.A.சுப்பிரமணியம், திருப்பதி :**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

6. **திரு.ஏ.சிவக்குமார் , திருப்பதி :**

குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என கூறினார்.

7. **திரு.N.வினோத்குமார், எம்.ஜி.ஆர். நகர்:**

குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என கூறினார்.

8. **திரு.R.ரவிச்சந்திரன், காருடையாம்பாளையம்:**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு தனது ஆட்சேபனையை தெரிவித்தார். அதற்கான காரணங்களை பின்வருமாறு கூறினார். இந்த பகுதியில் அதிக அளவு கல்குவாரி இயங்குவதாகவும், வாழ்வாதாரம் பாதிக்கும் என்றும், குறிப்பாக விவசாயம் ஆடு, மாடுகள், குடிநீர் மாசுபாடு, மண் மாசுபாடு, கட்டிட விரிசல் ஆகிய பாதிப்புகள் இருக்கும் என தெரிவித்தார். இதனால் கல்குவாரிக்கு அனுமதி அளிக்க வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார். அரசாங்கத்தை ஏமாற்றினாலும்,

அரசு அதிகாரிகளை ஏமாற்றினாலும் இந்த பூமித்தாய் மன்னிக்க மாட்டாள் என்றும், எதிர்கால சந்ததியின் சாபம் இந்த தவறுகளை செய்பவர்களை தண்டிக்கும் என கூறி தனது உரையை முடித்தார்.

**9.திரு. .S.முருகேசன், வெள்ளியம்பாளையம்:**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

**10. திரு.P.சுந்தராஜ், நொய்யல்:**

சதாசிவம் கல்குவாரிக்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவித்தார்.

**11. திரு.M.கார்த்திக், வேலாயுதம்பாளையம்:**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என கூறினார்.

**12. திரு.சதிஷ், புதூர்பட்டி:**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு அனுமதி தரலாம் என கூறினார்.

**13. திரு.பாலமுருகன், கரூர்:**

S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கு அரசு சட்டதிட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு இயங்கினால் தனக்கு எந்தவித ஆட்சேபனை இல்லை எனக் கூறினார்.

**14. திரு.சண்முகம், தோழர் கழகம், கரூர்:**

முதலில் தனது வணக்கத்தை அனைவருக்கும் தெரிவித்தார். தானும் வேலை வழங்குவதாகவும், தான் கள்ளசாராயம் காய்ச்சினால், கஞ்சா விற்றால் அதற்கு வேலைவாய்ப்பு வழங்கினால் இந்த மாவட்ட நிர்வாகம் அனுமதி கொடுக்குமா? என்ற கேள்வியை எழுப்பினார். கல்குவாரியும் எத்தனை பேருக்கு வேலை கொடுப்பார்கள், தானும் வேலைவாய்ப்பு தருகிறேன் எனக் கூறினார். இவ்வாறு வேலைவாய்ப்பு கொடுத்தால் மக்கள் வேலைக்கு வருவார்களா? இதில் பல சிக்கல் இருக்கும் சட்டம் பாயும் என சிந்திக்க மாட்டார்கள். சிலர் ஆய்வின் போது கல்குவாரிக்கு அனுமதி அளித்ததாகவும், ஆனால் தனக்கு கல்குவாரிக்கு நுழைய அனுமதி தரவில்லை எனக் கூறினார். தொழிலாளர்களுக்காக, மக்களுக்காக அவர்களுடைய உரிமைக்காக உருவாக்கப்பட்ட கட்சிக்கு சொந்தக்காரங்களே ஆதரவு அளிப்பது வருத்தமளிக்கிறது எனக் கூறினார். மண் நன்றாக இருக்க வேண்டும் என்பதை மாவட்ட நிர்வாகம் மனதில் கொள்ள வேண்டும் என்று கூறி அவர் தனது உரையை முடித்தார்.

**15. திரு.P.பூபதி, தழையூத்துப்பட்டி:**

தான் தழையூத்துப்பட்டியில் இருந்து வருவதாகவும் இந்த குவாரியில் பெரிய இயந்திரங்களை கொண்டு இயக்க போவதில்லை அதனால் எந்தவித சுற்றுச்சூழல் பாதிப்பும் வரப்போவதில்லை அதனால் ஆட்சேபனை இல்லை எனக்கூறினார்.

**16. திரு.சுரேஷ், அரசம்பாளையம்:**

ஆட்சேபனை இல்லை எனக் கூறினார்.

**17. திரு.S.பிரபாகரன், புன்னம்சத்திரம்:**

தனக்கு எந்தவித ஆட்சேபனை இல்லை எனக் கூறினார். தனது கருத்தையும் பதிவிட்டார். கட்டடத்திற்கு தேவையான அடிப்படை கற்களையும், தார்ரோட்டிற்கு தேவையான கற்களையும், வெட்டி எடுக்கிறார்கள். அதனால் சிந்தித்து அனுமதி வழங்கலாம் எனக் கூறினார்.

**18. திரு.விஜயன், காவேரி ஆறு பாதுகாப்பு இயக்கம், கரூர்:**

கரூர் பகுதி ஏற்கனவே மழை அளவு ஆண்டுக்கு ஆண்டு குறைவதாகவும், அதனால் அதிக அளவு மரங்களை நடவேண்டும் எனவும், வனங்களை பாதுகாக்க வேண்டும் எனவும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டும் எனக்கூறினார். பின்பு கல்குவாரி மட்டுமில்லாது மணல் குவாரிக்கும் அனுமதி வழங்கக்கூடாது மற்றும் S.சதாசிவம் சாதாரண கல் மற்றும் கிராவல் கல்குவாரிக்கும் அனுமதி வழங்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

19. <u>திரு.சண்முகம், சட்ட விரோத கல்குவாரி எதிர்ப்பு இயக்கம், கரூர்:</u>

இந்த கூட்டத்தில் கலந்த அனைவருக்கம் தனது வணக்கத்தை தெரிவித்தார். குப்பம் கிராமத்தில் 1.54.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள சதாசிவம் கல்குவாரிக்கான கருத்து கேட்பு கூட்டத்தில் குவாரிக்கு அனுமதி தரக்கூடாது எனக்கூறி தனது உரையை பின்வருமாறு தொடர்ந்தார். அவர் கூறியதாவது, "ஏற்கனவே ஐம்பதுக்கும் அதிகமான குவாரிகளால் இப்பகுதி பாலடைந்துள்ளது. மாசுக்கட்டுப்பாடு வாரிய புத்தகத்திலும் இப்பகுதியானது over-exploited பகுதி எனக் குறிப்பிட்டுள்ளது. நிலத்தடி நீர் 1000 அடிக்கும் கீழே சென்றுவிட்டது. இப்பகுதியில் மக்கள் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இக்குவாரியானது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தவறான தகவல்கள் கொடுத்து அனுமதி வாங்கியுள்ளனர். அதன் அடிப்படையில்தான் இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்குவாரி அமையவுள்ள புலத்திலிருந்து 262 சர்வே எண்ணில் ஒரு வீடும், 212 சர்வே எண்ணில் சி வீடுகளும், 305–ல் கோவிலூர் 380ல் வீடுகளும், 204,203,384 ஆகிய சர்வே எண்களில் வீடுகளும் உள்ளன எனக் கூறினார். ஆகவே 300 மீ விதியின் அடிப்படையில் இந்த குவாரிக்கு அனுமதி தரக்கூடாது எனக் கூறினார்.

இக்குவாரி பஞ்சாயத்து ரோட்டினை ஒட்டியே குவாரியானது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றும். இப்போதுதான் அனுமதி கேட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் குவாரியில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதுவே சட்டப்படி தவறு எனவும் அவர் கூறினார். அதுமட்டுமல்லாது 440 கோடியில் கட்டப்பட்டுள்ள நீர்நிலை திட்டத்தின் கீழ் 7.5 கோடி தொட்டி, 500மீ சுற்றளவில் அமைந்துள்ளது. மேலும் புல எண்.221, 222ல் வீடுகள் உள்ளன. மின் கம்பங்கள் அருகிலேயே உள்ளது. அது திட்ட அறிக்கையில் காண்பிக்கப்படவில்லை எனவும் கூறினார் மற்றும் மின் கம்பத்தின் அருகிலேயே குவாரி பணியானது நடைபெற்று கொண்டிருக்கிறது எனவும் கூறினார். இது போன்ற பல விதிமீறல்கள் இருப்பதனால் கல்குவாரிக்கு அனுமதி தரக்கூடாது என்று கூறி தனது உரையை முடித்தார்.

20. <u>திரு.M.R.K.சிவா, கரூர்:</u>

முதலில் தனது வணக்கத்தை தெரிவித்து கொண்டார். மேலும் இந்த குவாரியானது ஏற்கனவே செயல்பட்டு வந்ததாகவும் மீண்டும் அனுமதிக்கு வந்ததாக கூறினார். முன்னாள் திட்ட அறிக்கையின்படி செயல்படாத குவாரி எனவும் குறிப்பிட்டார். அளவுக்கு அதிகமாக குவாரி பணி செய்யப்பட்டதாகவும் தற்போது அனுமதி இல்லாமல் இயக்கத்தில் உள்ளது என்றும், விதிமுறைகள் எதையும் பின்பற்றாத குவாரி என்றும், பொதுமக்களுக்கு ஆபத்தாக இயங்கி கொண்டிருக்கும் குவாரி என்றும் சாலைகள் பாதிக்கக்கூடிய அளவிற்கு குவாரி கற்களானது அளவுக்கு அதிகமாக எடுத்து செல்வதாகவும், இந்த குவாரிக்கு அனுமதி அளித்தால் இதுபோன்ற விதிமீறல்கள் நடக்கும் எனக் கூறினார்.

இதன்மேல் புகார் அளித்து எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை மற்றும் பதில் ஏதும் அனுப்புவதும் இல்லை என்று கூறினார். இதற்கு அனுமதி கொடுத்தால் சுற்றுச்சூழல் பாதிப்பு மட்டுமல்லாமல் மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கும் எனக் கூறி ஆட்சேபனை தெரிவித்து தனது உரையை முடித்தார்.

21. <u>திரு.முகிலன், ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், கரூர்:</u>

முதலில் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கம் தனது வணக்கத்தை தெரிவித்து கொண்டார். ஏற்கனவே இந்த குவாரியில் கீழ்புற பகுதியில் புல எண் 226–ல் நல்லசாமி குவாரி உள்ளது. மேற்புற பகுதியில் வழிதடம் தாண்டி NTC கல்குவாரி புல எண் 362–ல் உள்ளது என்றும் கூறினார். VAO அறிக்கையில் குவாரி அமைந்துள்ள புலத்திலிருந்து 300மீ தூரத்தில் அனெக்ஷர் 97A, EIA - ல் எந்த ஆட்சேபனையும் இல்லை எனக்கூறிவிட்டு 300மீ சுற்றளவில் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்புகள் ஏதுமில்லை, பிரதான கோயில்கள் ஏதுமில்லை, உயர்மின் அழுத்த கம்பிகள் ஏதுமில்லை எனக் குறிப்பிட்டிருந்தது என்றும், ஆனால் திட்ட அறிக்கையில் குவாரியை ஒட்டி மேற்குபதியில் EB line செல்கிறது என்று கூறினார்.

இந்த குவாரியானது இப்போதுதான் அனுமதிக்கு வந்தது என்றும், கருத்து கேட்பு கூட்டம் இப்போதுதான் நடைபெறுகிறது ஆனால் இந்த குவாரியனாது ஏற்கனவே இயக்கத்தில் உள்ளது என்று PPTயிலும்,

குவாரியானது சட்ட விரோதமாக செயல்பட்டுள்ளது என்று உரிமையாளர்களே கூகுள் வரைபடம் காட்டியுள்ளார்கள் என்று கூறினார். மேலும் கனிம கொள்ளை செய்த இவர்களை கைது செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் சாலையை ஒட்டியே குவாரியை இயக்கி உள்ளனர். அதனால் இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

குவாரியின் தென்புற பகுதியில் புல எண் 505–ல் கோவில் உள்ளதாகவும், மேற்கு பகுதியில் 362–ல் வீடு உள்ளதாகவும், கிழக்கு பகுதியில் 224–ல் தழையூத்துப்பட்டி வீரகுமாரசாமி கோவில் இருப்பதாகவும் அருகாமையில் புலஎண்.220,221,222,212,198–ல் வீடுகள் உள்ளது என்றும், வருவாய்துறை ஆவணங்களில் உள்ளது என்றும் குறிப்பிட்டார். இதற்கான ஆவணங்களையும் கூட்டத்திற்கு காண்பித்தார்.

மேலும் குவாரியிலிருந்து 100மீ தூரத்தில் 440 கோடி மதிப்புள்ள நீரேற்று திட்டத்தின் கீழ் 7.5 கோடி மதிப்புள்ள தண்ணீர் தொட்டி தெற்கு பகுதியில் உள்ளது என்றும், 500மீ தூரத்திற்குள் நீர்நிலைகள், குடிநீர் ஆதாரங்கள் உள்ளது என்றும் குறிப்பிட்டார். இத்தனை விதிமீறல்கள் செய்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என்றும், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டு கொண்டார்.

மேலும் தாங்கள் கல்குவாரிக்கும் மணல் குவாரிக்கும் எதிர்கள் அல்ல. இதனை நாம் வெளிநாடுகளிலிருந்து மிகவும் மலிவான விலைக்கு (டன் 1000 ரூ) இறக்குமதி செய்யலாம். எனக் குறிப்பிட்டவர் 15 லட்சம் டன் மணல் இறக்குமதி செய்தால் தமிழ்நாட்டிற்கு போதும் எனவும், ஆனால் 50–60 விழுக்காடு M Sand அண்டை மாநிலங்களுக்கு செல்வதாக இதனை அதிகாரிகள் பிடிப்பதாகவும் கூறினார். மேலும் அதிக எடை ஏற்றிய லாரிகளை பிடிக்கவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் கரூர் மாவட்டத்தில் செயல்படும் என கூறும் குவாரிகளும், அனுமதி முடிந்ததாக சொல்லப்படும் 300 குவாரிகளையும் ஆய்வு செய்ய வேண்டும். அரசிற்கு வருவாய் ஈட்டுங்கள் என்றும், குவாரிகள் சொந்த செலவில் சாலைகள் போட வேண்டும் என வலியுறுத்தியும் எல்லா குவாரிகளும் பசுமை அரண் அமைக்க வேண்டும் என வலியுறுத்தியும் கம்பி வேலி அமைக்க வேண்டும் மற்றும் பெயர் பலகை வைக்க வேண்டும் என்றும் கூறினார்.

விதிமீறி செயல்படும் கிரஷர்களை மூட வேண்டும் எனவும் கேட்டு கொண்டார். மேலும் விதிமீறி செயல்படும் குவாரிகளுக்கு இழப்பீடு தொகையினை விதியுங்கள் என்றும் வலியுறுத்தினார். இறுதியாக சதாசிவம் கல்குவாரிக்கு அனுமதி பெறுவதற்கு மட்டுமில்லை விதிமீறி குவாரி செயல்பட்டதிற்கு சதாசிவம் கைது செய்ய தகுதியானவர் என்று கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>**

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர்.